**தலைப்பு 239 – வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 கணக்காய்வு அபிப்பிராயம்

வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஒக்தோபர் 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் விடுக்கப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

#### 2.1.1 அதிக நிதி ஏற்பாட்டினை வழங்குதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 07 செலவு விடயங்களுக்காக ரூபா 12.88 மில்லியன் மொத்த தொகையான தேறிய நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 06.86 மில்லியன் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அச்சேமிப்பு வழங்கப்பட்ட தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக 21 சதவீதத்திலிருந்து 91 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | மதிப்பீட்டினை முடியுமான அளவு சரியாக தயாரித்தல் வேண்டும். | இதன் போது 2019 பாதீட்டு உரையின் பிரகாரம் மூலதனச் செலவுகள் மற்றும் பொருட்கள் சேவைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் 10% இலிருந்து 15% வரையான அளவினை சேமிக்குமாறு உத்தேசிக்கப் பட்டிருந்ததனால் நிதி அமைச்சின் மூலம் மற்றும் தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் வழங்கியுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் செலவுகள் முகாமைத்துவம் செய்யப்பட்டிருந்தமை. |

**2.1.2 மதிப்பீட்டினைத் தயாரிப்பதிலுள்ள பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 05 செலவு விடயங்கள் சம்பந்தமாக தொடக்க செலவு மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் திருத்திய செலவு மதிப்பீடுகளின் வித்தியாசம் 52 சதவீதத்திற்கும் 180 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | மதிப்பீடு முடியுமான அளவு சரியாகத் தயாரிக்கப்படுதல் வேண்டும். | ஆவணங்களை அச்சிடல் அதிகரித்துச் சென்றதன் காரணமாக மீண்டும் நிதி ஏற்பாட்டினை திருத்தம் செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தமை, எதிர்பாராத வகையில் அத்தியாவசிய செலவுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டமை, பாதீட்டு திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் பெறுகைச் செயற்பாடுகள் முடிவறுத்தப்பட்டதன் பின்னர் நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் மத்திய வங்கி அறிக்கையின் பயன்படுத்தல் அறிக்கைக்கு இணங்க தயாரித்தல் முதலிய விடயங்கள் காரணமாக இருந்தது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ பலவீனம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) திணைக்களத்தின் பதவியணியினரின் வருகை அல்லது வெளிச் செல்லல் ஆகிய இரண்டில் ஒரு சந்தர்ப்பம் மாத்திரம் பதியப்பட்டிருக்கையில் அது ½ நாள் விடுமுறையாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரியப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அதன்படி நடவடிக்கை எடுப்பதற்கு | வருகை மற்றும் வெளிச் செல்லல், குறுகிய விடுமுறை, வெளிச் செல்லல் என்பன சம்பந்தமாகக் காணப்படுகின்ற சட்ட விதிகளின் பிரகாரம் உள்ளகக் கட்டுப்பாட்டினை திருப்தியான நிலையில் | விசேடமாக பதவி நிலை உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய சில உத்தியோகத்தர்களுக்கு அவசர அழைப்புக்கு இணங்க வெளிச் செல்லல் பதிவேட்டில் பதிவு செய்துள்ள போதிலும் உரிய கூட்டங்களின் தன்மையின் பிரகாரம் சில வேளைகளில் அலுவலகத்திற்கு மீண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | தாபன விதிக் கோவையில் அல்லது ஏனைய சுற்றறிக்கைகளில் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் வெளியில் சென்று வருகை தருகின்ற உத்தியோகத்தர்கள் அல்லது அலுவலகத்திலிருந்து வெளிச் செல்லும் போது விரல் அடையாள மிடப்பட்டிருக்காமையும் அவதானிக்கப்பட்டது. | பேணுதல் வேண்டும். | வருகை தருவதற்கு முடியாத சந்தர்ப்பம் ஏற்படுகையில் விரல் அடையாளம் இடும் இயந்திரத்தில் வருகை / செல்லல் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் அதற்கான மேல் அங்கீகாரத்தினைச் சமர்ப்பிப்பதற்கும் கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட வகையில் நடவடிக்கை எடுப்பதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஒவ்வொரு உத்தியோகத்தரின் பொறுப்பில் காணப்படுகின்ற கோவைகள் திணைக்களத்தை புனரமைப்புச் செய்கின்ற சந்தர்ப்பத்திலும் பொருட்களை கைதவிர்ப்புச் செய்யும் போதும் கோவைகள் காணாமல் போதல் இடம்பெற்றுள்ளது என்பது அவதானிக்கப்பட்டதுடன் இது சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் 28 ஆம் அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவு தொடர்பாக நீங்கள் கவனம் செலுத்துதல் வேண்டும். | தேவையான ஆவணங்களை பாதுகாப்பதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும் இது சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் 28 ஆம் அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவு தொடர்பாக உங்களின் கவனம் கோரப்படுகின்றது. | அப்போது திறைசேரி வளவில் காணப்பட்ட பாதுகாப்பு நிலைமையின் அடிப்படையில் இந்த அனைத்து ஆவணங்களும் பொருட்களும் நீக்கப்பட வேண்டியிருந்தது. காட்டப்பட்டுள்ள காணாமல் போதல் அதன் காரணமாக இடம்பெற்றது என்பது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமை ஏற்படாமைக்கு அனைத்து கட்டுப்பாட்டு முறைமையும் உருவாக்கப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |
| (இ) | தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 35.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு உத்தியோகத்தருக்கு ஒரு மாதத்திற்குள் பெற்றுக்கொள்ளக் கூடிய குறுகிய விடுமுறை 02 ஆக இருந்த போதிலும் அந்த எல்லையை மிகைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | காணப்படுகின்ற சட்ட விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறுகிய விடுமுறை சம்பந்தமான தவறுகளை எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிதி அமைச்சு செயலாளரின் MF/01 ஆம் இலக்க 2016 திசெம்பர் 23 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் வெளிநாட்டு பயிற்சியை பூர்த்தி செய்ததன் பின்னர் உரிய விபரங்களை உள்ளடக்கி சமர்ப்பிக்கப்பட வேண்டிய பயிற்சி அறிக்கை மற்றும் செலவு அறிக்கை உத்தியோகத்தர்களின் கோவைகளில் உள்ளடக் கப்பட்டிருக்காததுடன் வெளிநாட்டுப் பயணங்கள் சம்பந்தமான அழைப்புக்களின் பிரதியும் உரிய கோவைகளில் இல்லாதிருந்ததனால் அப்பயணத்திற்காக வெளிநாட்டினால் அல்லது நிறுவனத்தினால் செலவு செய்யப்பட்டது / செய்யப்படவில்லை என்பது கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கணக்காய்வு பரீட்சிப்பிற்குரிய தகவல்கள் பேணப்படுதல் வேண்டும். | அவ்வாறான செயலமர்வு களுக்காக பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் உத்தியோகத்தர்கள் சிலர் உரிய அறிக்கைகளை நிதி அமைச்சு செயலாளருக்கு ஒப்படைத்துள்ளதுடன் சில உத்தியோகத்தர்கள் தமது பொறுப்பில் வைத்துள்ளதனால் கோவைகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை என தயவாகத் தெரிவிக்கின்றேன். |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 610 ஆம் பிரிவின் பிரகாரம் ஏதாவது ஒரு செயற்திட்டத்திற்காக வெளிநாட்டு உதவி பெற்றுக்கொள்ள முடியுமா என்பது தொடர்பாக விசாரிப்பதற்கு உட்படுவது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் என்ற போதிலும் கணக்காய்வின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் 24 அரசாங்க நிறுவனங்களின் 77 செயற்திட்டங்களுக்காக ரூபா 2,025,572,387 தொகைக்கு அண்மித்த பெறுமதியைக் கொண்ட பணம் பொருட்கள் | ஒழுங்கு படுத்தலினை வலுப்படுத்துதல் வேண்டும். | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் XI ஆம் அத்தியாயத்தில் நிதிப் பிரமாணம் 610 இன் மூலம் அனைத்து அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டதானது வெளிநாட்டு உதவிகளுக்கான அனைத்து கலந்துரையாடல்களை (Negotiations) நடத்த வேண்டியதானது பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினாலாகும். இத் திணைக்களத்தின் மூலம் மற்றும் திறைசேரியின் ஏனைய திணைக்களங்களின் |

| | | |
|---|---|---|
| நிபுணத்துவ உதவி என்பவற்றை நேரடியாகப் பெற்றுக் கொண்டமை அவதானிக்கப்பட்டதுடன் இவ்வாறு பெற்றுக் கொண்ட உதவிகள் சம்பந்தமான தகவல்களை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தும் முறையான நடைமுறை (சுற்றறிக்கை வழங்குவதற்கு மேலதிகமாக) தயாரிக்கப்படாமை நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமையும். | | ஒருங்கிணைப்புடன் அனைத்து அமைச்சுக்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களுக்கு வெளிநாட்டு மானியங்களைப் பெற்றுக் கொள்ளும் சரியான நடைமுறை தொடர்பாக தெரியப்படுத்தி அதனைப் பின்பற்றுமாறு சுற்றறிக்கை மற்றும் ஆலோசனைகள் வழங்கி எங்களால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை களுக்குப் புறம்பாக உதவிகள் பெற்றுக் கொள்ளப்பட்டதா என்பதனைத் தேடிப் பார்த்தல் மற்றும் அது தொடர்பாக எங்களுக்குத் தெரியப்படுத்துதலானது கணக்காய்வு உத்தியோகத்தர்களின் மூலம் இடம்பெறுகின்றது. |

## 3.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கடன் பணம் பணஅளிப்புச் செய்யப்படாது காணப்பட்ட செயற்திட்டங்கள் | | |
| 2004 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை கடன் உடன்படிக்கை கைச் சாத்திடப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பணஅளிப்புச் செய்யப்படாத (disbursed) பெறுமதி ரூபா 2,295,503,313 ஆன 22 கடன் உடன்படிக்கைகள் காணப்பட்டன. மேலும் எதுவித பணமும் பண அளிப்புச் செய்யப்படாது காணப்பட்ட | உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கி அனைத்து தேவைப்பாடுகளை யும் பூரணப் படுத்திய செயற் திட்டங்களுக்காக உடன்படிக்கை செய்து கொள்வதினூடாக வெளிநாட்டு உதவிகளைப் பயன்படுத்துதல் | செயற்திட்ட தாமதத்திற்கு காரணமாக புதிய அரசாங்கத்தை உருவாக்குதல், அரசாங்க கொள்கை உடன்படிக்கை களைத் திருத்தம் செய்யும் தேவைப்பாடு, கேட்பு மனு பொறியியலாளர் மதிப்பீட்டினை விட மிகைத்தல், தாமதித்து ஆரம்பித்தல், அமுல்படுத்தப்படாமை தீர்த்து வைக்கப்படாதுள்ள காணிப் பிணக்குகள், |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டங்களுக்கு மத்தியில் கடன் இலக்கம் 2014023 இற்காக ஜப்பான் யென் 27,434,000 தொகை 2015 ஆம் ஆண்டின் போதும் 2017016 மற்றும் 2018032 ஆகிய இரண்டு செயற்திட்டங்களுக்காக 2018 ஆம் ஆண்டின் போதும் முறையே ஜப்பான் யென் 63,620,000 மற்றும் 21,278,000 தொகைகள் ஏனைய கட்டணமாகக் கடன் முகவர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2019 ஆம் ஆண்டில் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட கடன் இலக்கம் 2019010, 2019039 மற்றும் 2019008 ஆகிய செயற்திட்டங்கள் சம்பந்தமாக முறையே யூரோ 560,417 தொகை, 264,492 தொகை மற்றும் அமெரிக்க டொலர் 116,059 தொகை 2019 ஆம் ஆண்டின் போது ஏனைய கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஆக்கபூர்வமான துடன் மேலதிகக் கிரயத்தை குறைப்பதுமாகும். | உபகடன் உடன்படிக்கைகளை மேற்கொள்வதில் தாமதம், கலந்துரையாடல் நீடிப்பதனால் தீர்மானம் எடுப்பதில் தாமதம், பாதீட்டு நிதிஏற்பாடு போதியதாக இல்லாமை, ரூபாவில் முற்பணத்தைச் செலுத்துவதற்கான அங்கீகாரம் தாமதித்தல், கடன் பணத்தை கொவிட் 19 செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டதனால் அதற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருத்தல், ஒப்பந்தத்தை வழங்குவதில் தாமதம், உடன்படிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாமை முதலியவற்றைக் காட்டலாம். |
| (ஆ) | ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திச் செயற்திட்டத்தின் பகுதி II கடன் இலக்கம் (2012032)<br>--------------------------------------------<br>2012 ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்ட எனினும் 2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட யுவான் 1000 மில்லியன் தொகையான மேற்கூறிய செயற்திட்டம் தொடர்பாக 2019 ஆம் ஆண்டு வரை யுவான் 700 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. மிகுதிப் பணம் இரத்துச் செய்யப்பட்டதுடன் இக்கடன் பணத்திற்குரிய வட்டிப் பணம் ரூபா | வெளிநாட்டு கடன் பணம் பூரணமாகப் பயன்படுத்தப்படாத போதிலும் அவ்வாறு கடப்பாடு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் வட்டிப் பணத்தை செலுத்துதல் பொருளா தாரத்திற்கு வினைத்திறனற்ற செலவாகும். | நிவாரணமளிக்கும் உடன்படிக்கைகளில் கையொப்பமிட்டதன் பின்னர் இச்செயற்திட்டத்திற்காக எதுவித பயன்பாடும் இடம்பெற்றிருக்கவில்லை. அதற்கிணங்க 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான பயன்பாட்டு வேண்டுதல் உபயோகப்படுத்தப் படாததனால் கடன் பணத்தின் செல்லுபடியாகும் காலம் 2019 யூலை 31 வரை நீடிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 230,076,974 மற்றும் பயன்படுத்தப்படாத பணத்தின் அடிப்படையில் கடப்பாடு செய்து கொடுப்பனவுகள் 2019 ஆம் ஆண்டு இறுதி வரை ரூபா 379,932,374 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | அதற்கிணங்க 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான அனைத்து பயன்பாடுகளும் 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்றதுடன் பயன்படுத்தப்படாத கடன் பணம் இரத்துச் செய்யப்பட்டது. அவ்வாறே செயற்திட்டத்தில் இடம்பெற்ற மாற்றங்களின் காரணமாக அந்த இரண்டாவது கட்டத்தின் கடன் நிதி முழுமையாக செயற்திட்டத்திற்கு ஈடுபடுத்துவதில்லை என துறைமுக அதிகாரசபை தீர்மானித்துள்ளதுடன் பயன்படுத்தப்படாத பணத்தை உறுதியாக வெளிப்படுத்துவதானது செயற்திட்டம் முறைப்படியாக முடிவுறுத்தப்பட்டதன் பின்னராகும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரித்த பதவியணியினர் 156 ஆக உள்ளதுடன் உள்ளபடியான பதவியணியினர் 131 ஆக இருந்ததனால் 25 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டன. ஒட்டுமொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 13 அதாவது 23 சதவீதம் சிரேஷ்ட மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களை உள்ளடக்கியிருந்ததுடன் 8 வெற்றிடங்கள் அதாவது 13 சதவீதம் நாடளாவிய மட்டத்திலுள்ள வெற்றிடங்களை உள்ளடக்கியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அத்தியாவசிய மில்லையாயின் அங்கீகரித்த பதவியணியினர் களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திணைக்களத்தின் பதவியணியினர் மீளாய்வுக் கூட்டத்தின் போது அத்திணைக்களத்தின் பதவிகள் சம்பந்தமாக எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்ற தீர்மானத்திற்கு உட்பட்டு வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |